**யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - 2023**

**----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை தகவல்களினை உள்ளடக்கிய குறிப்புக்கள் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,
- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்
- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா.23,415,770 தொகை நன்கொடைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் படி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படுவதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட நிதியக் கணக்கிற்குக் கீழ் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், வரையறுக்கப்பட்ட நிதியம் கூட்டப்பட்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான மிகை அதே தொகையால் முறையே குறைக்கப்பட்டிருந்தது. | இந்தக் குறிப்பிட்ட நன்கொடையானது நிறுவனத்திற்குள் தற்போது நடைபெறுகின்ற செயற்திட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இந்த நடவடிக்கைகளிலிருந்து தோற்றிவிக்கப்பட்ட வருமானத்தின் நிதி நடவடிக்கையை தெளிவுபடுத்துவது கட்டாயமாகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ)ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் புனரமைப்பு செயற்திட்டமாக காண்பிக்கப்பட்ட ரூபா.16,374,485 தொகையானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 50 இன் பிரகாரம் படி அதே தன்மை அல்லது நடவடிக்கையின் கீழ் வகைப்படுத்தப்படாமலிருந்தது. | எங்களுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தினை முன்னேற்றுவதற்கு நேரடியாக பங்களிப்புச்செய்யக்கூடிய சொத்துக்களின் முதலீடுகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டத்தை இது குறிக்கின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ)உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான ஊக்கப்படுத்தல் செயற்திட்டங்களில் (AHEAD) இருந்து பெறப்பட்ட நிதியத்திலிருந்து ரூபா.220,700,622 கிரயத்தில் 2022 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட்ட கணனி விஞ்ஞான கட்டிடமானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் படி பின்னோக்கிச் சரிப்படுத்தாமல் மீளாய்வாண்டில் பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் வருவாய் என நிதி செயலாற்றுகை கூற்றில் கணக்கிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் பெறுமதியை மூலதனமாக்காமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா.6,437,101 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதி முகாமைத்தவத்தின் கீழ் உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ பொருட்களாகவோ அல்லது நிதியாகவோ பெறப்படுகின்ற நன்கொடைகள் மற்றும் பொருட்கள் நிதிக்குழவின் சிபாரிசுகளினூடாக கவுன்சிலுக்கு அறிக்கையிடப்பட வேண்டும். கவுன்சில் அனுமதி கிடைத்தவுடன் கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் முறையான பதிவினை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு நிதிக்கிளைக்கு அறிவிக்கப்பட வேண்டும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.13,142,949 பெறுமதியான சொத்துக்கள் கணக்குகளில் கொண்டவரப்பட்டிருக்கவில்லை. | மூலதன பெறுகைகளுக்கான கொடுப்பனவுகள் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் போது மாத்திரமே கணக்குகளில் பதிவு செய்யப்படும். | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் கணக்குக்கு எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ)உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான ஊக்கப்படுத்தல் செயற்திட்டத்தால்(AHEAD) நன்கொடையளிக்கப்பட்ட ருபா 250,609,496 தொகையானது 2021 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளிற்கு எடுத்தவரப்பட்டிருக்கவில்லை. | கவுன்சில் அனுமதி பெறப்பட்டவுடன் 2024 ஆம் ஆண்டிற்கான கணக்கில் நடைமுறைச் செய்முறையாக பதிவுசெய்யப்படும். | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட அனைத்து நன்கொடைகளும் கணக்குக்கு எடுக்கப்பட வேண்டும். |
| (இ)கொள்கைத்திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் | அலுவலகச் கையளிப்புச் செய்முறையானது உரிய திணைக்களத்தால் தற்போதும் | காணி மற்றும் கட்டிடம் மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு |

| | | |
|---|---|---|
| கலாச்சார அலுவல்கள் அமைச்சால் ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் பயிற்சி நிலையங்களை நடாத்துவதற்கு 2015 ஆம் ஆண்டில் நன்கொடையளிக்கப்பட்ட புளியங்குளத்திலிலுள்ள காணி மற்றும் கட்டிடங்களானது இந்த அறிக்கைத்திகதி வரையிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | செயற்படுத்தப்படுவதுடன் அந்தச் செய்முறை முடிவடைந்த அறிக்கையிடப்பட்டவுடன் இந்தச் சொத்துக்கள் முறையாக பல்கலைக்கழகத்திற்கு சொந்தமானதொன்றாக உரிய முறையில் இனங்காணப்படும். | எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 முதல் 07 ஆண்டுகள் வரை கடந்தும் அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா.7,056,150 தொகை நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய கணக்கின் கீழ் காட்டப்படுகின்றது. | பல்கலைக்கழகமானது நிலுவையுள்ள தொகை பற்றி அமைச்சுடன் கலந்துரையாடலுள்ளது. அமைச்சிடமிருந்து நிதியைப் பெற்றவுடன் வருமதியானது உடனடியாக தீர்ப்பனவு செய்யப்படும். | நிலுவைத் தொகையை உரிய காலத்தில் வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை. | (i) | 68 சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,269,725 தொகையான கட்டுநிதி 14 நாட்கள் முதல் 104 நாட்கள் வரை காலதாமதமாகியே தீர்ப்பனவு செய்யப்பட்டது. | கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன முற்பணங்களை உரிய நேரங்களில் தீர்ப்பனவு செய்வதற்கு உத்தியோகத்தர்களஂிற்கு கற்பிப்பதற்கும் உள்ளக நிதிச் சுற்றறிக்கைகள் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) | 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 3,358,700 தொகையான | அனைத்து முற்பணங்களும் ரூபா 100,000 | நிதிப்பிரமாணங்களுடன் இணங்குவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முற்பணங்கள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினுடாக திறைசேரியின் அனுமதியைப் பெறாமல் அதிகூடிய வரையறையை விஞ்சி வழங்கப்பட்டிருந்தது. | தொகையான அதிகூடிய வீச்சுடன் வழங்கப்பட்டிருந்த துடன் எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் சுற்றறிக்கைகள் மீறப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XX இன் பிரிவு 03 | (i) கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்வதை உறுதிப்படுத்தாமல் ரூபா 2,878 மில்லியன் தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை பல்கலைக்கழக முறைமையிலுள்ள கல்விசார் உத்தியோகத்தர்களின் பொதுவாக வருகைப்பதிவேட்டில் கைச்சாத்திடாததுடன் இது 2017.11.11 இல் இடம்பெற்ற கோப் குழுக் கூட்டத்தில் திருப்திகரமாக தெளிவுபடுத்தப்பட்டது. | தாபன விதிக்கோவையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) ஆள்விரல் அடையாள வருகை மற்றும் வெளிச்செல்வதை உறுதிப்படுத்தாமல் ரூபா 28,628,818 தொகையான மேலதிக நேர மற்றும் விடுமுறை கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | கைவிரல் அடையாளத்தை பயன்படுத்தி வருகை மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்துவதற்கு புதிய முறைமை அமுல்படுத்தப்படும். இந்த முறைமையானது தற்போதுள்ள வருகை பதிவேடுகளை சரிசெய்யும். | தாபன விதிக்கோவையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 நவம்பர் 17 இன் 15/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை. | பரீட்சை நடைபெற்று 3 மாதங்களுக்குள் பெறுபேறுகள் வெளியிட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 வரை பல்கலைக்கழகத்தின் 11 பீடங்களில் நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 04 மாதங்கள் தொடக்கம் 27 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டது. | பெறுபேறுகளை உரிய நேரத்தில் வெளியிடுவதை உறுதிப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கல்வி அமைச்சின் 2023 சனவரி 18 ஆந் திகதிய | ரூபா 61,776,005 தொகையான பிணை அறவீட்டுத் தொகை திறைசேரிக்கு | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | அறவீட்டுத் தொகையை திறைசேரிக்கு |

| | | | |
|---|---|---|---|
| பீடீ/எச்ஆர்டீ/126/214 /19/2023 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | அனுப்பப்பட்டிருக்கவில்லை. | | அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 115,076,218 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 619,414,916 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 734,491,134 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மீண்டெழும் மானியங்கள் மற்றும் பரிமாற்றத்தகாத நடவடிக்கையிலிருந்தான மீண்டுவரும் வருமானம் மற்றும் மூலதன வருமானம் அதிகரித்தமையே முன்னேற்றத்திற்கு காரணங்களாகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புலமைப்பரிசில் திட்டங்களில் வெளிநாடு சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் என்பது (80) கல்விசார் ஊழியர்களும் இருபத்தொரு(21) கல்விசாரா ஊழியர்களும் புலமைப்பரிசில்களை முடித்து கடமைக்கு சமூகமளிக்கவில்லை. எவ்வாறாயினும், ஒப்பந்தங்களை மீறிய அதிகாரிகளிடமிருந்து 1980 முதல் 2023 வரையான காலப்பகுதியில் ரூபா 166,298,684 தொகையான ஆதன பிணைகளை மீளப்பெறுவதற்கு பல்கலைக்கழகம் முறையான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | முறிகளை மீறியவர்கள் ஈடுவைத்த முறி சொத்தினுடாக பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் கோரிக்கை கடிதமானது சட்டத் திணைக்களத்தினுடாக அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. | பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் இருந்து முறிகளை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |